

கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு கிணங்க மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி மதுரை மாநகர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்பந்திக்கும் பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாணவர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அன்பு என்ற துரை கோபால்சாமி தலைமையில் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது எடுத்த படம் உடன்கழகநிர்வாகிகள்மா.ஜெயராம்,ஒச்சுபாலு,சின்னம்மாள்,மூவேந்திரன்,ராகவன்,முருகவேல்இளைஞர்அணிசௌந்தர்ராஜன் மற்றும் மாநில நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் மண்டல தலைவர்கள் வட்டச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம்!

# ரூ. 3300 கோடி நிதியை விடுவிக்க ஒன்றிய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை!

## அமைச்சர் இ.பெரியசாமி அறிக்கை!

*சென்னை, பிப்.26-*

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ .3300 கோடி நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டுமென்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ. பெரியசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் இ.பெரியசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள 37 மாவட்டங்களில், 388 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப்பகுதிகளில் உடல் உழைப்பு சார்ந்த வேலை வழங்க முன்னரும் மக்களுக்கு வேலை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 85.19 லட்சம் குடும்பங்களுக்கு வேலை அட்டை வழங்கப்பட்டுள்ளது.



அதனடிப்படையில் 1கோடியே 9லட்சம் தனிநபர்களுக்கு வேலை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டில் 20 கோடி மனித சக்தி நாட்கள் வேலை வழங்க ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்ட நிலையில் இதுவரை 28.45 கோடி மனித சக்தி நாட்கள் பணி வழங்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட வேலை நாட்களுக்கு இது 142 சதவீத சாதனையாகும். பணிகளை மேற்கொள்ளும் மொத்த பணியாளர்களில் பெண்கள் 86 சதவீதமாகவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 27 சதவீதமாகவும் பழங்குடியினர்கள் பங்களிப்பு 1.63 சதவீதமாகவும் உள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் அதிக பயனடைபவர்கள் பெண்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும்

பழங்குடியினராக உள்ளனர். மக்கள் தொகை அடிப்படையில் இவ்வகுப்பினரின் பங்களிப்பு அதிக அளவில் உள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் 1.10 லட்சம் மாற்றுத்திறனாளிகளும் பயனடைந்துள்ளனர்.

எனவே, இத்திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு இத்திட்டம் பெரும்பங்களிப்பை வழங்கி வருகிறது. ஆனால் சமீப காலமாக ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான நிதி

விடுவிப்பதில் தாமதம் செய்வதால் இத்திட்டப் பணியாளர்களுக்கு குறித்த காலத்தில் ஊதியம் வழங்குவது காலதாமதம் ஏற்படுகிறது தற்போதைய நிலையில் இத்திட்ட பணியாளர்களுக்கான ஊதிய நிலுவை 2400 கோடியாகவும், திட்டத்தின் கீழ் கட்டப்படும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பொருட்கூறு நிலுவை 852 கோடியாகவும் உள்ளது.

நிலுவையிலுள்ள திட்ட நிதியை விடுவிக்ககோரி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரதப்பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். மேலும் தமிழ்நாடு நிதியமைச்சர் அவர்கள் ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நிலுவையிலுள்ள நிதியை விரைவில் விடுவிக்க கோரிக்கை விடுத்துள்ளார். நிதி பெறப்பட்டதும் பணியாளர்களின் நிலுவை ஊதியம் அவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் இ. பெரியாசமி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### புனித ரமலான் மாதத்தில் - நோன்புக் கஞ்சி தயாரிக்க ஏதுவாக

# பள்ளிவாசல்களுக்கு பச்சரிசி வழங்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு !

*சென்னை, பிப்.26-*

ஒவ்வொரு ஆண்டும் புனித ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரித்து வழங்கும் பொருட்டு, பள்ளிவாசல்களுக்கு பச்சரிசி, தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 2025-ஆம் ஆண்டிலும் இரமலான் மாதத்தில் நோன்புக் கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்க வேண்டும் என்று இஸ்லாமிய மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

2025-ஆம் ஆண்டு, இரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு ஏதுவாக பள்ளிவாசல்களுக்கு மொத்த அனுமதியின் கீழ் நோன்பு கடைப்பிடிக்கப் படும் நாட்களுக்கு மட்டும் பச்சரிசி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிவாசல்களுக்குத் தேவைப்படும் அரிசிக்கான மொத்த அனுமதியை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் படி, 7,920 மெட்ரிக் டன் அரிசி மொத்த அனுமதி மூலம் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும். இதனால், அரசுக்கு 18 கோடியே 41 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

# இந்தியை மீண்டும் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் !

## மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் கண்டன கோஷங்களை எழுப்பினார்

*கன்னியாகுமரி, பிப்.26-*

மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை மீண்டும் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி மற்றும் தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 25.02.2025, செவ்வாய்க்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் நாகர்கோவில், தலைமை தபால் நிலையம் அருகில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அ.அருண் காந்த் தலைமையில் நடைபெற்றது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சர்வாதிகார போக்குடன், இந்தியை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து கண்டன கோஷங்களை முழங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், அயலக அணி துணை செயலாளர் எ.பாபு வினிபிரட், வர்த்தகர் அணி இணை செயலாளர் என். தாமரைபாரதி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் ஐ.கேட்சன், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மாணவர் அணியினர், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள், பல்வேறு கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடி கிழக்கு ஒன்றிய திமுக சார்பாக ஒன்றிய செயலாளர் எஸ்பி. அய்யப்பன் ஏற்பாட்டில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் உப்புக்கோட்டை தனியார் மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேனி மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. கலந்துகொண்டு எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் சம்பந்தமாகவும்தமிழக முதல்வர் பிறந்த நாள் விழாவினை கொண்டாடுவது சம்பந்தமாகவும் ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில், திருகண்ணன், பொருளாளர் சுரேஷ், ஒன்றிய நிர்வாகிகள் வீரமுத்து, தமிழ்வாணன் முத்துப்பாண்டி,ராசா, ராசா, சிவா, பார்வதி அம்மாள், கூழையநூர் பாஸ்கரன், பெத்தமுத்து, இளைஞர் அணி ஜெயக்குமார், மனோஜ்.. மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் பிரதிநிதிகள், பாக முகவர்கள் மற்றும் கழகமுன்னோடிகள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை தெற்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் திருமங்கலத்தில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மாணவர் அணி அமைப்பாளர் பாண்டி முருகன் தலைமையில் கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், கே.இளமகிழன், செல்லம்பட்டி முத்துராமன், நாகராஜன், வக்கீல் பாலாஜி, சிவனாண்டி, கொம்பாடி தங்கம், லதா அதியமான், விமல், ஶ்ரீதர், ரம்யா முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் பெரியார் சிலையிலிருந்து பேரணியாக சென்று ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கண்டன உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கொ.தனபாண்டியன், மதன்குமார், ராமமூர்த்தி, தங்கபாண்டியன், சண்முகம், நாகராஜன், சிவமுருகன், சமயநல்லூர் சுரேஷ், வினோத், ஜெய்வாணி, மூவேந்திரன், கண்ணன், செந்தமிழ் அரசி, சுவர்ணா வெற்றி மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மாணவர்கள், மாணவ அமைப்பினர், திரளான கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-02-2025





தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின பேரில் மாணவரணி சார்பில் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் முன்னிலையில் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில கழக செய்தி தொடர்பாளர் பேராசிரியர் கான்ஸ்டண்டடைன் ரவிச்சந்திரன் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், காரைக்குடி மாநகர செயலாளர் நா.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே .எஸ். .ர வி மற்றும் மாணவரணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.